


**03.05.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **தீவிரவாதத்திற்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை** மேற்கொள்ள இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. **தேவாரம், திருவாசகம் பாடல்களை உலகிற்கு தந்த** பெருமை தமிழகத்தையே சேரும் என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

3. **ஊடக பொழுதுபோக்கு தளத்தில் இந்தியா** முதன்மை நாடாக உருவெடுக்கும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

**உள்ளூர் பகுதி மேம்பாட்டில்** சமுதாய வானொலிகளின் பங்கை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் பாராட்டியுள்ளார்.

5. **உதகை கோடை விழாவின் ஒருபகுதியாக** கோத்தகிரியில் 13-வது காய்கறி கண்காட்சி இன்று தொடங்கியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**தீவிரவாதம் மற்றும் அதன் ஆதரவாளர்களுக்கு** எதிராக வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

புதுதில்லி வந்துள்ள அங்கோலா அதிபர் லாரன்க்கோ உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்ட பின்னர் உரையாற்றிய பிரதமர், அந்நாட்டின் ராணுவ மேம்பாட்டிற்கு 200 மில்லியன் டாலர் நிதியுதவியை இந்தியா வழங்கும் என்றார்.

இப்பேச்சுவார்த்தைகளின் ஒருபகுதியாக வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின

முன்னதாக அங்கோலா அதிபருக்கு குடியரசு தலைவர் மாளிகையில் இன்றுகாலை பாரம்பரிய சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவும், பிரதமர் திரு. நரேந்திரமோடியும் அவருக்கு வரவேற்பளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. லொரென்கோ, இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பையும், நட்புறவையும் வலுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முன்னதாக தேசபிதா மாகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் அவர் அஞ்சலி செலுத்தினார்.

அங்கோலா அதிபரின் வரவு குறித்து சமூக வலைதளத்தில் மகிழ்ச்சி தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி உடனான அதிபரின் பேச்சுவார்த்தைகள் இந்தியா - அங்கோலா, இந்தியா - ஆப்பிரிக்க உறவுகளில் புதிய வாய்ப்புகளை தோற்றுவிக்கும் என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**குடியரசு தலைவர் திருமதி திரௌபதிமுர்மு** முதலாவது தேசிய சமரச மாநாட்டை புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

மத்திய சட்ட அமைச்சர் திரு.அர்ஜுன்ராம் மெஹ்வால், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ்கானா, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர்.வெங்கட்ரமணி உள்ளிட்டோர் பங்கேற்கும் இம்மாநாட்டில் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதில் மாற்று ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்படும்.

❖❖❖❖❖❖

**ஜே.பி.நட்டா**

**தேவாரம், திருவாசகம் பாடல்களை உலகிற்கு தந்த** பெருமை தமிழகத்தை சேரும் என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

சென்னை அருகே திருக்கயிலாய தர்மாபுரம் ஆதீனத்தில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், தமிழகத்தின் கலாச்சாரத்தோடு சைவ சித்தாந்தம் வேரூன்றி உள்ளதாக குறிப்பிட்டார்.

தத்துவத்துடன் சைவ சித்தாந்தமும் இணைந்து புனிதமான கலைகளையும், கோவில் திருப்பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதாக கூறியுள்ளார்.

சைவ சித்தாந்தம் தொடர்புடைய ஆன்மீக நிறுவனங்கள் தத்துவ மார்க்கத்தின் கலங்கரை விளக்கமாக திகழ்வதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

தெய்வீக சக்தியை போதித்து மனதுருகும் பாடல்களை அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தர், படைத்ததாக பாராட்டினார்.

சைவ சித்தாந்தம் தொடர்பான செய்திகள் மனிதகுலத்தை மேம்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**பாகிஸ்தான் இறக்குமதி தடை**

**பாகிஸ்தானிலிருந்து நேரடி மற்றும் மறைமுக இறக்குமதிக்கு** தடை விதித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தேச பாதுகாப்பு மற்றும் பொதுநலன் கொள்கை அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த தடை உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**நாட்டின் ஊரக பகுதிகளில் விளையாட்டு துறை** மேம்பாட்டிற்கு மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

அருணாச்சல பிரதேச மாநிலம் காம்லே மாவட்டத்தில் கேலோ விளையாட்டுகளுக்கான பன்முக வளாகத்தை இன்று துவக்கி வைத்து பேசிய அமைச்சர், நாட்டிலுள்ள இளம் திறன்களை கண்டறிந்து மேம்படுத்துவதற்கான பிரதமரின் தொலைநோக்கு திட்டத்தை இது பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

தினசரி வாழ்வில் ஆரோக்கியம், உடல்வலிமை விளையாட்டின் அவசியத்தை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖

**பத்திரிக்கை சுதந்திர தினம்**

**சர்வதேச பத்திரிக்கை சுதந்திர தினம் இன்று** கடைபிடிக்கப் படுகிறது.

பத்திரிக்கை சுதந்திரம் மற்றும் ஊடகத்துறையில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மற்றும் தைரியமாக செய்திகளை வெளியிடுவது என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மக்கள் தொடர்பு மற்றும் உரிமைகளை பாதுகாப்பதில் பத்திரிக்கைகளின் பங்கை எடுத்துரைக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப் படுகிறது.

❖❖❖❖❖❖

## Waves உச்சிமாநாடு

**அஷ்விணி வைஷ்ணவ்**

**ஊடக பொழுதுபோக்கு தளத்தில் இந்தியா** உலக அளவில் தலைமை நாடாக உருவெடுக்கும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மும்பையில் வேவ்ஸ் ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக இதனைத் தெரிவித்த அமைச்சர் இப்பிரிவில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற உலக நிறுவனங்கள் ஆர்வத்துடன் இருப்பதாக கூறினார்.

கூகுள், மெட்டா மைக்ரோ சா∴ப்ட் நிறுவனங்கள், இந்திய படைப்பாற்றல் திறன் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

400 கோடி ரூபாய் செலவில் மும்பையில் ஏற்படுத்தப்படவுள்ள இந்த உயர்கல்வி நிறுவனம் வரும் காலங்களில் **I I T, I I M.,** மையங்களுக்கு இணையாக உருவெடுக்கும் என்றார்.

❖❖❖❖❖❖

**எல். முருகன்**

இந்நிலையில் வேவ்ஸ் 3-ம் நாளான இன்று தேசகட்டமைப்பில் சமுதாய வானொலிகளின் பங்கை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் பாராட்டியுள்ளார்.

சமுதாய வானொலி குறித்த தேசிய கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், கலாச்சாரத்தையும், உள்ளூர் மேம்பாட்டையும் அவை முன்னெடுத்துச் செல்வதாக பாராட்டினார்.

சிறப்பாக செயல்பட்ட சமுதாய வானொலிகளுக்கு விருதுகளை வழங்கி அமைச்சர் கவுரவித்தார்.

தொடர்ந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஊடக பொழுதுபோக்கு துறையின் பங்களிப்பு குறித்த கையேடு வெளியிடப்படுகிறது.

2027-ம் ஆண்டில் நாட்டின் வளர்ச்சி விகிதத்தில் ஊடக பொழுதுபோக்கின் பங்களிப்பு 7 சதவிகிதம் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், புதுப்பிக்கப்பட்ட தரவுகளுடன் இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**இலங்கை சிறையிலிருந்த 25 தமிழக மீனவர்கள்** விடுவிக்கப்பட்டுள்ளனர்

எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த இம்மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடந்த பிப்ரவரி மாதம் 23-ம் கைது செய்த நிலையில் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மத்தியவெளியுறவு அமைச்சகத்தின் நடவடிக்கைகளால் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதையடுத்து இம்மீனவர்கள் விமானம் மூலம் சென்னை அழைத்துவரப்படுவார்கள் என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**இதனிடையே கோடியகரைக்கு தென்கிழக்கே** மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் இன்று தாக்குதல் நடத்தியதில் 19 மீனவர்கள் பலத்த காயமடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**மதுரை வாய்ஸ்**

**மதுரை தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சி** நாளை தொடங்குவதாக எமது செய்தியாளா தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**நீலகிரி**

**உதகை கோடை விழாவின் ஒருபகுதியாக நீலகிரி மாவட்டம்** கோத்தகிரியில் 13-வது காய்கறி கண்காட்சி இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் தமிழர் பண்பாட்டை போற்றும் விதமாக பல்வேறு காய்கறிகளால் வடிவமைக்கப்பட்ட ஜல்லிக்கட்டு காளை, சிலம்பாட்டம், பட்டாம்பூச்சி உள்ளிட்டவை வியப்பூட்டுவதாக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**முட்டைகோஸ்**

**கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் கனமழை** காரணமாக முட்டைகோஸ் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**தண்ணீர் திறப்பு**

**திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம்** மிருகண்டா அணை பாசனத்திற்காக இன்று திறக்கப்பட்டது

இதன்மூலம் காந்தபாளையம், நல்லான்பிள்ளை பெற்றாள், சிறுவள்ளூர், எலத்தூர் உள்ளிட்ட 17 அணைக்கட்டிற்கு உட்பட்ட 3 ஆயிரம் ஏக்கர் விளை நிலம் பாசனவசதி பெறும்.

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும்** மழைக்காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 3 ஆயிரத்து 600 ஆக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 108 அடியாகவுள்ளது.

**தர்மபுரி ஒகேனக்கல் காவிரி ஆற்றில்** நீர்வரத்து இன்றுகாலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்,** பெங்களூருவில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - சென்னை சூப்பர் கிங்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖